பதிவு எண். M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை [illegible] காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் [illegible]

மலர்: 19] சென்னை: ஐப்பசி 9 (26—10—71) செவ்வாய் வெளியூர்: ஐப்பசி 10 (27—10—71) புதன் [இதழ்: 110

அரசு பஸ்களை நடத்தத் தனி அமைப்பு

சென்னை நகரம் மற்றும் புறநகர் அரசு பஸ் போக்குவரத்துத் துறையை ஒரு 'கார்ப்பரேஷனாக' மாற்றியமைக்கப்படும் எனப் போக்குவரத்து அமைச்சர் திரு. எஸ். இராமச்சந்திரன் இன்று மேல் சபையில் தெரிவித்தார்.

வெளியூர் பஸ்களில் நிர்வாகத் திறமையை உயர்த்த தனித்தனிக் கம்பெனிகளாகப் போக்குவரத்துத் துறை பிரிக்கப்படும் என்றும், மதுரை, கோவை போன்ற இடங்கள் தனித் தனி யூனிட்டுகளாக ஆக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

தியாகிகள் மீது காமராசருக்கு ஏற்பட்ட திடீர் அக்கறை பாரீர்!

காங்கிரசுத் தியாகி நேசமணிக்குச் சிலை வைக்க தி. மு. கழகம் முன்வந்துள்ளது அறிவீர்!

சென்னை, அக். 26-

" கடலூரில் நடைபெற்ற வெங்கடகிருஷ்ண ரெட்டியார் சிலைத் திறப்பு விழாவில் காமராசர், 'தியாகிகளை இப்போது யார் நினைக்கிறார்கள் -- அமைச்சர்களாக இருப்பவர்களைத்தான் மதிக்கிறார்கள். அமைச்சர்களாக இருந்தவர்களைப் பற்றி நினைக்கிறார்கள்; ஆனால், அமைச்சர்கள் ஆகாதவர்களைப் பற்றி யார் நினைக்கிறார்கள்" என்று பேசியிருக்கிறார்.

" 'தியாகிகளை மதிக்கவில்லை' என்று யாரைப் பார்த்துக் காமராசர் கூறுகிறார்? ஒருவேளை, தனது கட்சிக்காரர்களுக்குச் சொல்லிக் கொள்கிறாரோ என்னவோ! ஏனெனில், தியாகிகளை மதித்து வளர்த்த இயக்கம் தி. மு. கழகம் அல்லவா!

" தீக்குளித்த தீரர்கள் குடும்பமாயினும் -- வெஞ்சிறை புகுந்தவர்கள் குடும்பம் ஆயினும் -- அகால மரணம் அடைந்த தொண்டர்களின் குடும்பம் ஆயினும் அவர்கள் குடும்பத்திற்கு இயன்ற உதவியை ஆற்றிப் பழக்கப்பட்ட இயக்கம் தி. மு. கழகம்! தியாகிகளை மதித்து வளர்ந்த பரம்பரை தி. மு. கழகம்!

" இன்று ஏதோ திடீரென்று வெங்கடகிருஷ்ண ரெட்டியாருக்குச் சிலை வைக்கிறாரே -- அதற்கு முன்பு ஏன் இந்த நினைவு வரவில்லை; அந்த வெங்கடகிருஷ்ண ரெட்டியாரை காமராசர் எப்படியெப்படி அடக்கி ஒடுக்கினார் என்பதை நான் அறிவேன்.

" குமரி மாவட்டத்தைத் தாய்த் தமிழகத்துடன் சேர்க்க வேண்டும் -- என்பதற்காகக் களம் கண்ட நேசமணியின் நினைவு எப்போது காமராசருக்கு வந்தது -- நாகர்கோவில் தேர்தலுக்கு முன்புதான்!

" காமராசர், சட்டமன்றத்தில் அமைச்சர்களுக்குரிய முதல் வரிசையில் அமர்ந்தபோது, நேசமணி எந்த வரிசையில் உட்கார்ந்திருந்தார்?--ஏழு வரிசை தாண்டி எட்டாவது வரிசையில்தான் அந்தத் தியாகி உட்கார்ந்திருந்தார்; பின்னர் அவர் நாடாளுமன்ற உறுப்பினரானார்; அவர் உடல் கெட்டுவிட்ட செய்தியைக் கேட்ட பின்னர்தான, அவரைக் காமராசர் சென்று பார்த்தார்!

நேசமணி அவர்கள் செத்த பிறகு நாடாளுமன்ற இடம் கிடைக்க வழிவிட்டுவிட்டார் என்ற நிம்மதியுடன் நாடாளுமன்றத் தேர்தலுக்குப் போட்டியிட்டார் காமராசர்!

காமராசர் தேர்தலுக்குத் தேர்தல் நாகர்கோவில் மக்களிடம் சொன்னார் -- 'நேசமணிக்கு சிலை வைக்கப் போகிறோம் -- நேசமணிக்குச் சிலை வைக்கப் போகிறோம்' என்று; ஆனால் சிலை இதுவரை வைத்தார்களா என்றால், இல்லை!

" ஆனால் தி. மு. கழகத்தின் சார்பில் சொல்லிக்கொள்கிறேன்; 'குமரி மாவட்ட தி. மு. கழகத்தின் சார்பில் தியாகி நேசமணி அவர்களுக்குச் சிலை விரைவில் அமைக்கப்படும்' என்று!

" மாற்றுக் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும், தியாகிகளை மதிக்கும் பண்பை எங்களிடம் அறிஞர் அண்ணா அவர்கள் வளர்த்திருக்கிறார்கள்!

" ஆனால் காமராசரோ, அவரது காங்கிரசு இயக்கமோ மாற்றுக் கட்சித் தியாகிகளை மதித்ததுண்டா?

" அண்மையில் சைதைப் பகுதியில் ஒரு சுரங்கப் பாதைத் திறப்பு விழாவில் நானும் -- நாவலரும் கலந்துகொண்டோம்; அந்தச் சுரங்கப் பாதைக்கு, 'தீரன் சிவலிங்கம சுரங்கப் பாதை' என்று பெயரிட்டோம்.

" அன்றையத்தினம் சுதந்தர தின விழாவில் பேசுகையில் காமராசர், எவன் எவனுக்கோ சுரங்கப் பாதை திறக்கிறார்கள் -- யார் யார் பெயரையோ சூட்டுகிறார்கள்' என்று கூறியிருக்கிறார்; அவர் அன்று நின்று பேசிய இடம் கண்ணப்பர் திடல் -- அவர் மிதித்திருந்த மண், கண்ணப்பர் திடல் மண் -- அந்தக் கண்ணப்பர், காங்கிரசுத் தியாகி -- அவரது பெயரை அந்தத் திடலுக்குச் சூட்டியதும் சென்னை மாநகராட்சிதான்.

" இதை அறியாமல் காமராசர், மாநகராட்சியைத் திட்டிப் பேசினார் -- தி. மு. கழகத் தியாகிகளை இழித்துரைத்தார்!

" அப்பேர்ப்பட்ட காமராசர்தான், 'தி. மு. கழகம், மாற்றுக் கட்சியை மதிக்கவில்லை -- மாற்றுக் கட்சித் தியாகிகளை மதிக்கவில்லை' என்று பேசுகிறார்!"

--கழகத் தலைவர் கலைஞர்

(கலைவாணர் அரங்கில் நடந்த அண்ணா பிறந்த நாள் விழாவில்)

காஷ்மீர் எல்லையில் பாகிஸ்தான் படை

விமானத் தளம் அமைத்து அகழிகள் வெட்டி வருவதாகத் தகவல்

ஊளவறிய வந்த ஒற்றர்கள் சிலர் பிடிபட்டனர்

ஜம்மு, அக். 26—

காஷ்மீர் எல்லையில் பாகிஸ்தான் பெரும் அளவுக்குப் போர் ஆயத்தங்களைச் செய்துவருகிறது.

சியால்கோட் மாவட்டத்தின் பஸ்ரூர் பகுதியில் அது ஒரு புதிய விமானத் தளத்தை ஏற்படுத்தியிருக்கிறதாம்; அங்கே உயர்ந்த இரும்புக் கோபுரங்களும் அமைக்கப்பட்டுள்ளனவாம்; இந்த இரும்புக் கோபுரங்கள் 80 அடி உயரம் உள்ளதாம்; 40 மைல் தொலைவிலிருந்துகூட இதைக் காண முடிகிறதாம்.

இப்பகுதியில் காஷ்மீரின் 100 மைல தூர எல்லை நெடுகிலும் இராணுவப் படையினர் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றனர்.

பாகிஸ்தான் பகுதியில் இராணுவ நடமாட்டங்கள் தீவிரமடைந்திருக்கின்றன; இந்தியப் பகுதியிலிருந்தவாறே அதைத் தெளிவாகக் காண முடிகிறது; ஜெனரல் திக்கா கான் தலைமையில் இந்த நடவடிக்கைகள் நடைபெறுகின்றன.

தனது உளவு நடவடிக்கைகளையும் பாகிஸ்தான் தீவிரப்படுத்தியிருக்கிறது; அண்மையில் பத்துப் பன்னிரண்டுபேர் கைது செய்யப்பட்டுள்ளனர்; இவர்களில் ஒருவர் தாங்கள் இந்திய இராணுவ நடவடிக்கைகளை அறிந்துவரும் பொருட்டு அனுப்பப்பட்டதாக ஒப்புக் கொண்டிருக்கிறார்.

போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறி எல்லை நெடுகிலும் பாகிஸ்தான் படையினர் அகழிகளை அமைத்து வருகின்றனர்.

'கல்லக்குடி அஞ்சல் நிலையப் பெயர் மாற்றம் முறையானதே'

சென்னை உயர் நீதிமன்றம் தீர்ப்பு

டால்மியா சிமெண்டுக் கம்பெனி மனு தள்ளுபடி

சென்னை, அக். 26—

" டால்மியாபுரம் அஞ்சல் நிலையத்தை, 'கல்லக்குடி அஞ்சல் நிலையம்' என்று பெயர் மாற்றம் செய்தது செல்லும்; இதில் சட்ட விரோதம் ஏதும் இல்லை" என்று, சென்னை உயர் நீதிமன்றம் தீர்ப்புக் கூறியது.

'டால்மியாபுரம் அஞ்சல் நிலையம்' என்று இருந்ததை, 'கல்லக்குடி அஞ்சல் நிலையம்' என்று மத்திய அரசு பெயர் மாற்றம் செய்தது.

இதற்கு, டால்மியாபுரம் சிமெண்டுத் தொழிற்சாலை நிர்வாகம் எதிர்ப்புத் தெரிவித்து -- உயர் நீதிமன்றத்தில் 'ரிட்' மனுத் தாக்கல் செய்தது.

" 1938-ஆம் ஆண்டிலிருந்து டால்மியாபுரம் அஞ்சல் நிலையம் என்ற பெயர் இருந்துவருகிறது; அந்தப் பெயர், டால்மியா சிமெண்டுக் கம்பெனி பெயருடன் தொடர்பு கொண்ட ஒன்றாகும்; இதைப் பொதுமக்களுக்குத் தெரியாமலும் -- கோரிக்கை இல்லாமலும கல்லக்குடி அஞ்சல் நிலையம் என்று மாற்றப்பட்டுவிட்டது.

" பெயர் மாற்றம் செய்யும்போது வழக்கமான சட்ட நடவடிக்கை முறையை அரசு மேற்கொள்ளவில்லை; எனவே, பெயர் மாற்றம் சட்ட விரோதமான செயலாகும்"

என்று அந்த மனுவில் கூறப்பட்டிருக்கிறது.

அஞ்சல்--தந்தித் துறை இயக்குநர், சென்னைப் போஸ்ட் மாஸ்டர்-ஜெனரல் ஆகியோர் இந்த ஆட்சேபதத்துக்குப் பதிலளிக்கையில் குறிப்பிட்டதாவது:—

" பெயர் மாற்றம், டால்மியா சிமெண்டுக் கம்பெனியைப் பொறுத்த பிரச்சினை அல்ல; அந்தப் பகுதிக் கிராம மக்களின் விருப்பத்தைப் பொறுத்த பிரச்சினையாகும்.

' 1970-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் நாடாளுமன்றத்தில் இந்தப் பிரச்சினை விவாதிக்கப்பட்டது; தமிழக அரசின் கோரிக்கையின் மீது நடந்த இந்த விவாதத்துக்குப் பின், பெயர் மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது; இதில் சட்ட விரோதமான செயல் ஏதும் இல்லை."

நீதிபதி இராமபிரசாத் ராவ், வழக்கை விசாரித்து மனுவைத் தள்ளுபடி செய்தார்; அவர், தமது தீர்ப்பில் கூறியதாவது:—

" அரசு, தனது கடமையிலிருந்து தவறிவிடவில்லை; மேலும், இந்தப் பெயர் மாற்றத்தால் மனுதாரர் பாதிக்கப்படவில்லை."

ம.பி.-யில் புதிய வரிகள்

போபால், அக். 25—

வங்காள தேச அகதிகளுக்காகும் செலவைச் சமாளிப்பதற்காகச் சில புதிய வரிகளை மத்தியப் பிரதேச அரசு விதிக்கக்கூடும்.

அமைச்சரவைக் கூட்டத்திற்குப் பிறகு முதலமைச்சர் எஸ். சி. சுக்ளா, செய்தியாளரிடம் கூறியதாவது:—

" புதிய வரிகளை, மக்கள், மனமுவந்து கொடுப்பர் என நம்புகிறேன்.

' இத்தகைய வரிகளை எதிர்ப்பது, நாட்டு விரோதச் செயலாகும்."

அதிகப் புகை விட்டால் லைசென்சு ரத்து

அதிக புகை க்கும் வாகனங்கள் -- அதுபோல அதிமாக இரைச்சல போடும் வாகனங்கள தொடர்பாக மிகவும் கடுமையாக இருக்கப் பிரிட்டன் முடிவு செய்துள்ளது.

இதுவரையில் இருந்த கட்டுப்பாடுகளை மேலும் இறுக்கிட அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

இத்தகைய வாகனங்களுக்கு லைசென்சு மறுக்கப்படுவது வரை அரசாங்கம கண்டிப்பாக நடந்துகொள்ளும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தனியார் கார்கள், பிற வாகனங்கள், லாரி -- பஸ் ஆகிய எல்லா வாகனங்களுக்கும் இந்தப் புதிய கட்டுப்பாடு பொருந்தும்.

'தந்தை பெரியாருக்குத் தக்க சிறப்பளிக்கத் தவறோம்'

'தமிழ் மக்கள் உள்ளத்தில் என்றென்றும் நிலைத்திருக்கும் வகையில் காரியமாற்றுவோம்'

சட்டப் பேரவையில் முதலமைச்சர் கலைஞர் பெருமித அறிவிப்பு

பிறந்த நாள் விழா பற்றிய பல்வேறு கேள்விகளுக்குப் பதில்

சென்னை, அக். 25—

"பெரியார் அவர்களைத் தமிழ் மக்கள் மனத்தில் என்றென்றும் பதியவைக்கத்தக்க அளவில் எப்படியெல்லாம் செய்யலாம் -- எப்படிக் காரியமாற்றலாம் என்பதுபற்றியெல்லாம் அரசு பரிசீலிக்கும்.

"பெரியாருடைய அஞ்சல் தலை வெளியிடுவதுபற்றித் தமிழக அரசு கேட்கவேண்டிய நேரத்தில் மத்திய அரசிடம் கேட்கும்; மத்திய அரசும் ஏற்றுக்கொண்டு வெளியிடும் என்று நம்புகிறேன்"

என்று தமிழகச் சட்டப் பேரவையில், முதலமைச்சர் கலைஞர் அவர்கள் கேள்வி நேரத்தின்போது தெளிவுற விளக்கிக் கூறினார்.

திராவிட கழகத் தலைவர் பெரியார் ஈ. வெ. ரா. அவர்களின் பிறந்த நாள் விழா குறித்துக் கேட்கப்பட்ட கேள்விகளும் — முதல்வர் அளித்த பதில்களும் வருமாறு :—

என். கிட்டப்பா (தி. மு. க.) :— "பெரியார் ஈ. வெ. ரா. அவர்களின் பிறந்த நாளை அரசாங்க விடுமுறை நாளாக அறிவிக்கும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா ?"

முதல்வர் :—"அப்படித் திட்டம் இல்லை."

வீராசாமி (தி. மு. க.) :—"பெரியார் இந்தச் சமுதாயத்தில் மறுமலர்ச்சியை உண்டாக்கியவர்; ஆகவே, அவருடைய பிறந்த நாளைக் கொண்டாடுவதற்காக ஒரு நாளை விடுமுறையாக அறிவித்து -- அதற்குப் பதில் வேறு ஒரு நாளை வேலை நாளாக வைத்துக்கொள்ளுமாறு ஏற்பாடு செய்யப்படுமா ?"

முதல்வர் :—"பெரியார் ஓய்வின்றி உழைப்பதையே விரும்புகிறவர்; ஆகவே, அவரே அதை விரும்பமாட்டார்."

கோவை செழியன் (தி.மு.க.) :— "பெரியாரும் -- அவருடைய மாணவரான அண்ணா அவர்களும் இந்த நாட்டுக்குச் செய்த சேவை என்றும் மறக்க முடியாததாகும்; எனவே, இந்தியா முழுவதற்கும் விடுமுறை நாள் ஒன்றைப் பெரியார் பிறந்த நாளில் விடுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?"

முதல்வர் :—"இந்தியத் தேசத் தலைவர்களிலேயே மகாத்மா காந்தி ஒருவருக்குத்தான் அவ்வாறு விடுமுறையாக விட்டிருக்கிறார்கள்; ஆகவே, இப்படிப்பட்ட யோசனையைச் சொல்வதன்மூலம், அரசாங்கம் மறுக்கவேண்டிய ஒரு சூழ்நிலையை உருவாக்கிச் சங்கடம் ஏற்படுத்தவேண்டாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்!"

கே. டி. கே. தங்கமணி (வலது கம்யூ):—"பெரியாருடைய பிறந்த நாளையொட்டி ஏதாவது பரிசு வழங்க ஏற்பாடு செய்யப்படுமா? தமிழ் மக்களின் கவனத்தில் என்றும் நிலைத்து நிற்க வழிகோலப்படுமா?"

முதல்வர்:—"ஒருமுறை அண்ணா அவர்கள் இம்மாமன்றத்தில் அவரைப் பற்றிக் கூறும்போது 'இந்த அமைச்சரவையையே பெரியார் அவர்களுக்கு அர்ப்பணித்திருக்கிறோம்' என்று கூறியிருக்கிறார்; ஆகவே, உறுப்பினர் கூறிய யோசனை உரிய நேரத்தில் பரிசீலிக்கப்படும்."

மு. மலைச்சாமி (தி. மு. க.):— உறுப்பினர் அவர்கள் கேள்வி கேட்டதிலிருந்து பெரியார் பிறந்த நாளை இவ்வாறு கொண்டாடுவதில் எல்லா எதிர்க் கட்சிகளும் ஒத்துக்கொள்வதாகத் தெரிகிறது; ஆகவே, அரசாங்கம் மறுபடியும் யோசனை செய்து விடுமுறை விட ஏற்பாடு செய்யுமா?"

முதலமைச்சர் :—"எல்லா எதிர்க் கட்சியினரும் அதற்கு ஒத்துக் கொண்டிருக்கிறார்களா என்று சொல்ல இயலாது; ஒருவேளை, அவர்கள் மவுனமாக இருப்பதைப் பார்த்தால் அவர்களும் சம்மதிக்கிறார்கள் என்று எண்ண வேண்டியிருக்கிறது; பெரியார் அவர்களைத் தமிழ் மக்கள் மனத்தில் என்றும் பதியவைக்க எப்படியெல்லாம் செய்யலாம் என்பது பற்றி யோசிக்கப்படும்."

லத்தீப் (முஸ்லிம் லீக்) :—"பெரியார் விஷயத்தில் எல்லாக் கட்சிகளும் ஒன்றாகவே இருக்கிறது என்பதைக் காட்டவே இந்த கேள்வியைக் கேட்கிறேன்; அவரை கௌரவிப்பதற்காக அஞ்சல் தலை (ஸ்டாம்பு) வெளியிடப்படுமா ?"

முதலமைச்சர் :—"பெரியாருடைய அஞ்சல் தலை வெளியிடுவது பற்றிக் கேட்க வேண்டிய நேரத்தில் கேட்கப்படும்; மத்திய அரசும் ஏற்றுக்கொண்டு வெளியிடும் என்று நம்புகிறேன்."

என். கணபதி (தி.மு.க.) :— "அண்ணா அவர்கள், பெரியாரைப் பற்றி ஒருமுறை குறிப்பிடும்போது, 'தமிழ்நாட்டின் தேசியச் சின்னமாக இருக்கிறார்' என்று கூறியிருக்கிறார்; அந்தத் தேசியச் சின்னத்தை என்றென்றும் காப்பாற்ற நடவடிக்கை எடுக்கப்படுமா ?"

முதல்வர் :—"தேசியச் சின்னங்களை இந்த அரசு என்றும் அகௌரவித்தது கிடையாது."

காளிமுத்து (தி.மு.க.) :—"வ. உ. சிதம்பரம் பிள்ளையின் 100-வது பிறந்த நாளைக் கொண்டாட ஏற்பாடு செய்யப்பட்டதுபோல், பெரியாரின் 100-வது நாள் பிறந்த விழா கொண்டாட ஏற்பாடு செய்யப்படுமா ?"

முதல்வர் :—"நிச்சயம் செய்யப்படும்."

சுருளிவேல் (தி.மு.க) :—"பெரியார் சமூகச் சீர்திருத்தத்தை மேற்கொண்டவர்; ஆகவே, அவர் பிறந்த நாளை, சமூகச் சீர்திருத்த நாளாகக் கொண்டாடப்படுமா ?"

முதல்வர் :—"இதற்கு முதலிலேயே பதில் சொல்லிவிட்டேன்."

குறைந்தபட்ச போனசு வரம்பை உயர்த்தும் யோசனை

ஆதரித்து டில்லியில் நடைபெற்ற மாநாட்டில் அமைச்சர் என். வி. நடராசன் பேச்சு

மூடப்படும் தொழில்களை அரசே ஏற்க நிதி உதவுமாறு கோரிக்கை

புதுடில்லி, அக் 24 —

புதுடில்லியில் நடைபெற்ற இந்தியத் தொழிலாளர் விவகார மாநாட்டில், குறைந்தபட்ச போனசு 8.33 சதவிகிதம் இருக்க வேண்டுமென்ற தொழிலாளர் சங்கங்களின் கோரிக்கையைத் தமிழக அமைச்சர் என். வி. நடராசன் அவர்கள் கேரள அமைச்சர் வி. புருடோத்தமனும் ஆதரித்தனர்.

தமிழ்நாடு தொழிலாளர் நல அமைச்சர் திரு. என்.வி. நடராசன் அவர்கள் பேசுகையில் 'குறைந்தபட்ச போனசு 8.33 சத விகிதமாக இருக்க வேண்டும்' என்ற கோரிக்கையை ஆதரித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

"தொழிற்சாலைகள் மூடப்படுவதற்கு முன்பாக சட்டப்படி 2 மாத நோட்டீசு கொடுக்கப்பட வேண்டுமென்று மேற்கு வங்கத்தில் சட்டம் இயற்றப்பட்டுள்ளது; நோட்டீசு காலத்தை மூன்று மாதங்கள் என அதிகரிக்கலாம்; அவ்வாறு காலத்தை அதிகரிப்பது, அத்தொழிற்சாலையைத் தொடர்ந்து நடத்துவதற்கு வேண்டிய மாற்று ஏற்பாடுகளைச் செய்வதற்கு வசதியாக இருக்கும்.

தொழில்கள் மூடப்படும் பிரச்சினைக்குச் சட்ட நடவடிக்கைகள் மட்டும் போதிய பரிகார நடவடிக்கைகளாக இருக்க முடியாது.

மூடப்படுகின்ற தொழில்களை அரசே மேற்கொண்டு நடத்துவதற்கான திட்டத்துக்குப் போதிய நிதி உதவி தர மத்திய அரசு முன்வர வேண்டும்.

"குறைந்தபட்ச போனசு சம்பந்தமாக உடனடியாகச் சட்டம் இயற்ற வேண்டும்" என்று தொழிலாளர் பிரதிநிதிகள் கோரினர். ஆனால் மத்திய அரசாங்கம் இது பற்றி எதுவும் அறிவிக்கவில்லை.

மாநில அரசு உரிமையை அகற்றக்கூடாது

"ஒன்றுக்கு மேற்பட்ட மாநிலங்களில் உள்ள தொழில்களில் ஒரே சீரான நிலை இருக்க வேண்டும் என்ற வாதத்தின் அடிப்படையில், தொழில் உறவுகளில் மாநில அரசுக்கு உள்ள பொறுப்புக்களை அகற்றும் திட்டத்தைத் தமிழ்நாடு அரசு ஒப்புக்கொள்ளாது"

என்று தமிழகத் தொழிலாளர்நலத் துறை அமைச்சர் என். வி. நடராசன் அவர்கள் திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

கிராசுட்டி கூட்டம்

கிராசுட்டி தொகைகளை அளிப்பது சம்பந்தமாக மத்திய அரசாங்கம் சட்டமியற்ற மாநாடு பொதுவாக அங்கீகாரம் அளித்தது.

வேலைக்குச் செல்லும் பெண்களின் பிரச்சினை

அவசர அவசியமாகக் கவனிக்க ஆளுநர் வேண்டுகோள்

சென்னை, அக். 25—

"கிராமப் பகுதிகளில் வேலைக்குச் செல்லும் பெண்கள் ஏழைகளாகவும் -- கல்வி அறிவு இல்லாதவர்களாகவும் இருக்கின்றனர்; அவர்களது பிரச்சினைகளில் கவனம் செலுத்துவது அவசர அவசியமாகும்.

"கிராமப்புறங்களில் உள்ள குடும்பங்களின் வருமானத்தைப் பெருக்காமல் சுபிட்சத்தை நாட்டில் தோற்றுவிக்க முடியாது"

என்று தமிழக ஆளுநர் கே. கே. ஷா, வேலை பார்க்கும் பெண்களின் பிரச்சினைகளைப் பற்றிய கருத்தரங்கு ஒன்றைத் துவக்கிவைத்துப் பேசுகையில் சுட்டிக்காட்டினார்; அவர் மேலும் குறிப்பிட்டதாவது :—

"நகர்ப்புறப் பகுதிகளில் வேலை பார்க்கும் பெண்களுக்கு அவர்கள் வேலை பார்க்கும் இடங்களுக்கு அருகிலேயே தங்கும் வசதிக்கு அரசு வகை செய்ய வேண்டும்.

பெண்களுக்கான விடுதி நடத்துவதில் தனியார் நிறுவனங்களுக்கு அரசு உதவ வேண்டும்.

ஆசிரியர் தொழில் பெண்களைக் கவர்ந்துள்ளது; இந்தப் போக்கை வலுப்படுத்த வேண்டும்.

பெண்களை வேலைக்கு அமர்த்துவதில் சில தொழிலதிபர்கள் தயக்கம் காட்டுவது வருந்தத்தக்கதாகும்.

வேலை பார்க்கும் பெண்களின் குழந்தைகளுக்கான வசதிக்கும் வழிகோல வேண்டும்."

எல்லைக்கு அப்பால் பலியாகும் மனித உரிமை

கண்டிக்க இன்னமும் தயங்குவது ஏனோ?

விஜயலட்சுமி பண்டிட் இடித்துரை

கல்கத்தா, அக். 25—

"இந்தியாவின் எல்லைக்கு மறுபுறத்தில் மனித உரிமை அபாயத்திற்கு உள்ளாகியிருக்கும் நேரத்தில் ஐ. நா. நிறுவனம் தீர்த்துடன் செயல்பட வேண்டும்"

என்று, ஐ. நா. பொதுச் சபையின் முன்னாள் தலைவர்களில் ஒருவரான திருமதி விசயலட்சுமி பண்டிட், கல்கத்தா அரிமா சங்கத்தின் சார்பில் நடைபெற்ற ஐ.நா. நாள் கூட்டத்தில் உரையாற்றுகையில் வலியுறுத்தினார்; அவர் மேலும் குறிப்பிட்டதாவது :—

"உலகத்தின் மனச்சாட்சி -- என்று ஐ. நா. நிறுவனம் அழைக்கப்படுகிறது; ஆனால், வங்காள தேசத்தில் நடைபெறும் கொடுமைகள் பற்றி அது எவ்விதக் கண்டனமும் தெரிவிக்காமல் இருப்பது வியப்புக்குரியதாக இருக்கிறது.

"ஐ. நா. நிறுவனம், தனது செயல் திறனை, பேச்சுக்களின் மூலம் அல்லாமல் நடவடிக்கைகள் மூலம் காட்ட வேண்டும்."

'தியாகம் செய்யத் தயாராகுங்கள்'

தமிழ்நாட்டு மக்களுக்கு முதல்வர் வேண்டுகோள்

சென்னை, அக். 24—

"வங்க தேச அகதிகள் பிரச்சினை காரணமாகவும், போர் அபாயம் காரணமாக நாட்டின் நலனை முன்னிட்டும், பொருளாதாரநெருக்கடியிலிருந்து மீளுவதற்காக எல்லாவிதமான தியாகங்களையும் தமிழகம் செய்யவேண்டியிருக்கும்; இத்துறையில் மத்திய அரசுக்கு முழு ஒத்துழைப்புத் தருவோம்"

என்று தமிழ்நாடு சட்டப் பேரவையில் முதலமைச்சர் கூறினார்.

"மத்திய அரசின் நடவடிக்கைகளுக்கும் தமிழ் நாட்டைக் காப்பதற்கும் எல்லாவிதமான தியாகங்களையும் செய்ய முன்வரும்படி கேட்டுக்கொள்கிறேன்"

என்று தமிழக மக்களுக்கு அவர் வேண்டுகோள் விடுத்தார்.

சட்டப் பேரவையில் நேற்று முன்தினம் கேள்வி நேரம் முடிந்ததும், புதிய வரி விதிப்புக்களை அறிவித்து மத்திய அரசு பிறப்பித்துள்ள அவசரச் சட்டத்தைக் குறிப்பிட்டும் தலைமையமைச்சருடனும் -- முதல்வர்கள் மாநாடிலும் பேசியது என்ன என்பதை அவையில் முதலமைச்சர் விளக்கவேண்டும் என்றும், டாக்டர் எச். வி. ஹாண்டே கேட்டுக்கொண்டதற்குப் பதிலளிக்கையிலேயே முதல்வர், நிலைமைகளை விளக்கி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நடப்பு ஆண்டுக்குத் திட்ட முதலீடு

ரூ. 1,375.10 கோடி ஒதுக்க ஒப்புதல்

புதுடில்லி, அக். 26—

1971–72-க்கான மாநிலங்களின் ஆண்டுத் திட்டத்திற்கு ரூ. 1,375.10 கோடி முதலீடு செய்யத் திட்டக் குழு அங்கீகரித்திருக்கிறது.

தமிழ்நாட்டுக்கு அங்கீகரிக்கப்பட்ட இடைக்கால முதலீடு ரூ. 80.20 கோடி அடிப்படையில் மாநிலங்களின் திட்ட முதலீடு அமைந்திருக்கிறது.

மாநிலங்களின் ஆண்டுத் திட்டத்துக்குக் கீழ்க்கண்டவாறு நிதி வசதி வகை செய்ய உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

மாநிலங்களின் சொந்த நிதி வசதிகள் ரூ. 655.60 கோடி; மத்திய உதவி ரூ. 119.50 கோடி; மொத்தம் ரூ. 1,375.10 கோடி.

மத்திய ஆட்சிப் பகுதிகளுக்கான ஆண்டுத் திட்டத்துக்கு நிதி உதவியை முழுவதுமாக மத்திய அரசே அளிக்கும்.

கடந்த மூன்று ஆண்டுகளில் தொழில் உற்பத்திக் குறைந்து வந்துள்ளது குறித்துத் திட்டக் குழு கவலை தெரிவித்திருக்கிறது; 1970–71-ல் உற்பத்தி 4 சதவிகிதத்துக்குக் குறைந்தது; நடப்பு ஆண்டில் இதுவரை உற்பத்தி இன்னமும் குறைந்த விகிதத்தில் உள்ளது.

"தொழில் உற்பத்திக் குறைவுக்குப் பல காரணங்கள் இருந்த போதிலும் -- முக்கியக் காரணம், உருக்கு--இரும்பு அல்லாத உலோகங்கள், பருத்தி--சணல் போன்ற மூலப் பொருட்களின் பற்றாக் குறையேயாகும்" என்று திட்டக் குழு கருதுகிறது.

உருக்கு -- இரும்பு அல்லாத மற்ற உலோகங்கள் பற்றாக்குறை இரசாயனத் தொழிலுக்கான இயந்திர சாதனங்கள், பால் பண்ணைச் சாதனங்கள் போன்றவற்றைத் தயாரிக்கும் பல தொழிற்சாலைகளைப் பாதித்துள்ளது என்பதோடன்றி, பல தொழில் திட்டங்களை உருவாக்கும் கால அட்டவணையையும் பாதித்திருக்கிறது.

பிற்பட்ட மாவட்டங்களில் தொழில் வளர்ச்சி

மாநில -- மத்திய அரசுகள் கவனம் செலுத்தத் திட்டம்

புதுடில்லி, அக். 25—

'பிற்பட்ட மாவட்டங்கள்' என்று அறிவிக்கப்பட்டவைகளில் ஒரு சில மாவட்டங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு -- அங்கு தொழில் வளர்ச்சி ஏற்படுத்துவதற்கு ஆவன செய்யப்படும்.

இந்த மாவட்டங்களின் தொழில் வளர்ச்சியில் மாநில அரசும் -- மத்திய அரசும் ஒருமித்த கவனம் செலுத்தும்.

இங்கு நடைபெற்ற மத்திய தொழில் ஆலோசனைக் கவுன்சிலின் நிரந்தரக் குழுக் கூட்டம் மத்திய அரசின் தொழில் வளர்ச்சித் துறை அமைச்சர் மொய்னுல் ஹக் சௌத்திரி தலைமையில் நடைபெற்றபோது, மேற்கண்டவாறு முடிவு எடுக்கப்பட்டது.

"பிற்பட்ட பகுதிகளில் தொழில்களைத் தொடங்குவதற்கு 10 சதவிகித மானியம் அளிக்கப்படுவது போதாது" என்ற கருத்தை உறுப்பினர்கள் பலர் தெரிவித்தனர்.

ரூ. 50 இலட்சம் வரை முதலீடு உள்ள தொழில்களுக்குத்தான் இந்த மானியம் அளிக்கப்படுவது என்பது சரியல்லவென்றும், ரூபாய் இரண்டரை கோடி வரையில் முதலீடு செய்யும் தொழில்களுக்கும் இந்தச் சலுகை அளிக்கப்பட வேண்டும் என்றும் மற்றும் சிலர் கூறினர்கள்.

கிராமங்களில் கட்டாயப் பணி

மருத்துவ மாணவர்களுக்கு நிபந்தனை -- மத்திய அரசின் திட்டம்

புதுடில்லி, அக். 26—

மருத்துவக் கல்லூரிகளில் சேரும் மாணவர்கள், பட்டம்பெற்ற பிறகு கிராமங்களில் சென்று பணிபுரியச் சம்மதித்து, உறுதிமொழி எழுதித் தரவேண்டிவரும்; இந்தத் திட்டத்திற்கு, மத்திய அரசு அங்கீகாரம் அளித்துவிட்டது.

மக்கள் நல்வாழ்வு -- குடும்ப நலத் துறை அமைச்சகத்திற்கான நாடாளுமன்ற ஆலோசனைக் குழுக் கூட்டத்தில், மத்திய மக்கள் நல்வாழ்வுத் துறைத் துணை அமைச்சர் பேராசிரியர் டி. பி. சட்டோபாத்தியாயா இதை அறிவித்தார்.

மத்திய அரசின் அதிகாரத்தில் உள்ள மருத்துவக் கல்லூரிகளில் இது செயல்படுத்தப்படும்.

மாநில அரசுகளைச் சார்ந்த மருத்துவக் கல்லூரிகளிலும் இதைச் செயல்படுத்தக் கோரி, மாநில அரசுகளுடன் தொடர்பு கொள்ளப்பட்டுள்ளது.

இரயில் வண்டிகளின் வேகம் அதிகரிப்பு

புதுடில்லி, அக். 26—

நவம்பர் முதல் 31 புதிய இரயில்களை விடுவதென்று இரயில்வே போர்டு முடிவு செய்திருக்கிறது.

புதுடில்லிக்கும் — சென்னைக்கும் இடையேயான வாராந்திர—படுக்கை வசதியுள்ள ஜனதா எக்ஸ்பிரஸ் இனி, தனது பயணத்தை 54 மணி நேரத்துக்குப் பதில் 43 மணி நேரத்தில் முடிக்கும்.

90 இரயில்களின் போக்குவரத்து நேரம் நவ. 1-லிருந்து குறைக்கப்படும்; அவற்றில் 33 மெயில்—எக்ஸ்பிரஸ் இரயில்கள்—57 பயணி இரயில்கள்.

நவம்பர் முதல் பயண நேரம் குறைக்கப்படும் இரயில்களில் முக்கியமானவை :—

கிராண்ட் டிரங்க் எக்ஸ்பிரஸ், பிராஸ்டியர் மெயில், கல்கா மெயில், பம்பாய் — ஹௌரா மெயில் (நாகபுரி வழி), பம்பாய்—ஹௌரா மெயில் (அலகாபாத் வழி) இராஜதானி எக்ஸ்பிரஸ், மிராஜ்—பெங்களூர் மெயில், மகாலட்சுமி எக்ஸ்பிரஸ்.

ஜி டி. எக்ஸ்பிரஸ் இரயிலுக்கு அனுமதிக்கப்படும் அதிகபட்ச வேகம், மணிக்கு 110 கிலோ மீட்டர்; தற்போதைய வேகம் 100 கிலோ மீட்டர்.

ஒரு கோடியை நெருங்குகிறது

கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்து கொண்டோர் தொகை

புதுடில்லி, அக். 26—

இந்தியா முழுவதிலும் இதுவரையில் 89,31,027 பேருக்குக் கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டுள்ளது.

39,08,406 பெண்களுக்குக் கருத்தடை வளையம் (லூப்) பொருத்தப்பட்டுள்ளது.

கடந்த ஓராண்டில் மட்டும் 39,20,000 பேர் கருத்தடைச் சாதனங்களைப் பயன்படுத்தியிருக்கின்றனர்.

வேளாண்மை வளர்ச்சியில் தமிழகத்தில் சாதனை

மத்திய அமைச்சக அதிகாரி பாராட்டு

கோவை, அக். 26—

"வேளாண்மைத் துறையில் முன்னேற்றம் காரணமாக, நெல் -- பருத்தி -- எண்ணெய் வித்துக்கள் ஆகியவற்றின் உற்பத்தியில் தற்போது எதிர்பார்ப்பதைக் காட்டிலும் விரைவிலேயே சிறந்த சாதனையைப் புரிய முடியுமென்று எதிர்பார்க்கிறேன்"

என்று மத்திய வேளாண்மைத் துறை அமைச்சகச் செயலாளர் டி. பி. சிங் கூறினார்.

தமிழ்நாட்டின் பிரச்சினைகளையும் -- முன்னேற்றத்தையும் கண்டறிவதற்காக அவர் தமது அமைச்சக அதிகாரிகள் குழுவுடன் சுற்றுப் பயணம் செய்துவிட்டு டில்லி திரும்பினார்.

"நெல், வேர்க்கடலை, பருத்தி ஆகியவற்றில் கூடுதல் விளைச்சல் தரும் இரகங்களைப் புகுத்தியதிலும், தோட்டத் தொழிலிலும் தமிழ்நாடு சிறந்த சாதனை புரிந்திருக்கிறது" என்று அவர் பாராட்டினார்.

எனினும், 'பாதாள நீர் வள ஆய்வை ஒழுங்குபடுத்துவதும், கால்நடைப் பராமரிப்பில் அதிகக் கவனம் செலுத்துவதும் அவசியம்' என்று அவர் வலியுறுத்தினார்.

"பருப்பு வகைகள் உற்பத்தியைப் பெருக்கும் முயற்சியுடன் வேளாண்மையைப் பலதரப்படுத்துவதைத் தீவிரமாக்க வேண்டும்" என்று அவர் யோசனை தெரிவித்தார்.

இதற்காக, மாநில அரசுக்கும் -- இந்திய வேளாண்மை ஆய்வுக் கழகத்துக்கும் தமது அமைச்சகத்தின் மேம்பாட்டுப் பிரிவுக்கும் இடையே சீரிய ஒருங்கிணைப்புக்குத் தாம் பாடுபடுவதாக அவர் குறிப்பிட்டார்.

பண வீக்கத்தால் விலைவாசி ஏற்றம்

தவிர்க்கப் பொருளாதார ஆய்வுக் கழகம் எச்சரிக்கை

நோட்டடிப்பதில் நிதானம்காட்டுமாறு யோசனை

புதுடில்லி, அக். 26—

"விலைவாசி நிலவரத்தைக் கட்டுப்படுத்தும் நோக்கத்துடன் பணத்தைப் புழக்கத்துக்கு விடுவது (ரூபாய் நோட்டுகளை அச்சடித்து வெளியிடுவதை) மேற்கொண்டு அதிகப்படுத்துவதில் நிதானம் வேண்டும்" என்று தேசியப் பொருளாதார ஆராய்ச்சிக் கழகம் கூறியிருக்கிறது.

அரசாங்கத்தின் பற்றாக்குறை நிதி வசதிக் கொள்கையின் விளைவாகப் பணப் புழக்கத்தை அதிகப்படுத்த வேண்டிவருகிறது.

"இந்தியாவில் விவசாய மூலப் பொருள்களின் விலைகள் சர்வதேச விலைகளைவிட அதிகமாக உயர்ந்தால், ஏற்றுமதி மார்க்கெட்டுகளை இந்தியா இழக்க நேரிடும்; அல்லது, அரசாங்கம் உதவித் தொகைகளைக் கொடுப்பதன் மூலம் அவற்றை நிலைநிறுத்த வேண்டியிருக்கும்" என்று ஆராய்ச்சிக் கழகம் எச்சரித்திருக்கிறது.

"1970, 1971-ம் ஆண்டுகளில் தொழில்துறை உற்பத்தியின் வளர்ச்சி மெதுவாக இருந்திருப்பது, இந்தியப் பொருளாதாரத்தில் மனத்திற்கு மிகவும் கலக்கம் தரும் அம்சம் ஆகும்" என்றும் ஆராய்ச்சிக் கழகம் கூறியிருக்கிறது.

"அநேகமாக வளரவேயில்லை -- என்று விவரிக்கக்கூடிய விதத்தில், தொழில் வளர்ச்சி மிக மெதுவாக இருந்திருக்கிறது" என்று, ஆராய்ச்சிக் கழக தலைமை இயக்குநர் எஸ். பூதலிங்கம் கருதுகிறார்.

"இந்தத் தேக்க நிலையிலிருந்து தொழில் துறையை விடுவித்து, அது வளர்ச்சி பெறுவதைச் சாத்தியமாக்குவதற்குத் தொழில் கொள்கை மேலும் ஆக்க ரீதியான உருவத்தைப் பெற வேண்டும்" என்று அவர் கருதுகிறார்.

இதற்குத் தேவைப்படக்கூடிய நடவடிக்கைகள் பற்றி அவர் கூறுவதாவது :—

"வளர்ச்சியின் முக்கிய எல்லைகளுக்கான வழி முறைகளை விதிக்க லைசென்சுகள் அளிப்பது அவசியமாக இருக்கலாம்; நடைமுறைகளைச் சீரமைப்பதும் -- அரசாங்க நடவடிக்கைகளை விரைவுபடுத்துவதும் அதே அளவில் அவசியப்படுபவையே; ஆனால், ஆக்கரீதியான ஒரு கொள்கைக்கு இவை மட்டுமே போதாது.

"லைசென்சுகளை எவ்வளவு விரைவாக வழங்கினாலும், தொழில்கள் துவங்கி திறம்பட இயங்கும் என்பதை அவை உறுதி செய்யாது.

"அமைப்பு -- தொழில்களின் செயல் முறை, வளர்ச்சி ஆகியவற்றை ஏதாவது ஒருவகையில் பாதிக்கும் பொருளாதாரக் கொள்கைகள் அனைத்தும் தொழில் முன்னேற்றத்திற்கு ஊக்கமளிக்கும் விதத்தில் சீரமைக்கப்பட வேண்டும்."

வங்க அகதிகள் நாடு திரும்ப உதவுக!

குடியரசுத் தலைவர் வி. வி. கிரி வேண்டுகோள்

புதுடில்லி, அக். 25—

"வங்க தேச அகதிகள் சுதந்தரமாகவும் -- பாதுகாப்புடனும் தங்களது தாய்நாட்டுக்குத் திரும்ப உதவுவது உலக நாடுகள் -- ஐ.நா. நிறுவனம் ஆகியவற்றின் கடமையாகும்.

"அகதிகளுக்கு, அவர்களது நியாயமான சனநாயக உரிமைகள் கிடைக்கச் செய்ய ஐ.நா. உதவ வேண்டும்.

பாகிஸ்தான் இராணுவ ஆட்சியாளரின் கொடுமைகளுக்கு ஆளாகி, வங்க மக்கள் படும் அவதி, நாகரிக உலகுக்குப் பெரும் அதிர்ச்சியைத் தந்திருக்கிறது"

என்று குடியரசுத் தலைவர் வி. வி. கிரி அவர்கள், ஐ.நா. நாளையொட்டி விடுத்துள்ள செய்தியில் சுட்டிக்காட்டிக் குறிப்பிட்டிருக்கிறார்.

மறியல் வீரர்கள் செய்யப்போவது என்ன?

மதுவிலக்கை முன்வைத்துப் பொள்ளாச்சியில் பிரச்சாரம் நடத்துவரா?

சிண்டிகேட் கட்சிக்கு முதலமைச்சர் வினா

சென்னை, அக். 26—

"மதுவிலக்குக் கொள்கையில் தாங்கள்தான் மிகுந்த தீவிரவாதிகள் என்று காட்டிக்கொள்ள மறியல் போராட்டங்களை நடத்தி வரும் சிண்டிகேட் காங்கிரசார், பொள்ளாச்சி இடைத்தேர்தலில் என்ன செய்யப்போகிறார்கள் ?" என்ற வினாவை எழுப்பியுள்ளார் முதல்வர் கலைஞர்.

"மதுவிலக்குப் பிரச்சாரத்தை முன்வைத்துப் பிரச்சாரம் செய்வார்களா ?" என்று வினவிய அவர், பொள்ளாச்சி இடைத்தேர்தல் சிண்டிகேட் ஆதரிக்கப்போவதாகக் கூறப்படும் வேட்பாளர் மதுவிலக்குக் கொள்கையை எதிர்த்துப் பேசியவர் என்பதையும் நினைவுபடுத்தினார்.

சட்டமன்ற மேலவையில் மதுவிலக்கு ஒத்திவைப்பு மசோதாவின்மீது நடைபெற்ற விவாதங்கட்குப் பதிலளித்துப் பேசுகையில் கலைஞர் மேலும் கூறியதாவது :—

"இந்தியா முழுவதும் மதுவிலக்குக் கொள்கையைச் செயல்படுத்தப்படும்வரை தமிழ்நாட்டில் மதுவிலக்கை ஒத்திவைப்பது என்றுதான் முடிவு செய்திருக்கிறோம்.

'இந்தியா முழுவதும் மதுவிலக்கு செயல்படுத்தப்படும், என முடிவு எடுக்கும் காலம் வந்தால், அப்போது தமிழ்நாடுதான் முதன் முதலாக மதுவிலக்கைச் செயல்படுத்த முன்வரும் என்ற உறுதியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

'மதுவிலக்குக் கொள்கைக்காக மதுக் கடைகள் முன்னால் மறியல் செய்யக் கூடாதா? என்ற கேள்வி இங்கே எழுப்பப்பட்டது.

முன்பு நடந்த மறியலுக்கும் இப்போது நடக்கும் மறியலுக்கும் பெரும் வேறுபாடு உண்டு; முன்பெல்லாம், மறியலில் ஈடுபட முன்வருபவர்கள் தாங்கள் கைது செய்யப்படுவோம் என்று அறிந்தே போராட்டத்தில் ஈடுபட முன்வருவார்கள்.

அப்படிக் கைது செய்யப்பட்டவர்கள் பொறுப்பில்கூட வெளியே வரமாட்டார்கள்; ஆனால் தற்போது மறியல் போராட்டத்தில் ஈடுபடுபவர்கள் கைது செய்யப்பட்டபின், பொறுப்பில் வெளியே வருவது வியப்பைத் தருவதாக இருக்கிறது.

மதுக்கடைகள் ஏலம் விட்ட நேரத்தில் -- பல இடங்களில் பெண்கள் மறியல் போராட்டம் செய்த நேரத்தில், அப்போது மறியல் அமைதியாக நடந்த காரணத்தால் யாரும் கைது செய்யப்படவில்லை; ஆனால், மதுக்கடைகள் முன்னால் மறியல் செய்த பெண்களில் சிலர் கடைகளுக்குச் சென்றவர்களைத் தடுத்து நிறுத்திப் போராட்டம் செய்ததால் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

'அப்போது போராட்டம் நடத்தியவர்கள் மீதான வழக்குகளைத் திரும்பப் பெறவேண்டும்' என்று எதிர்க்கட்சித் தலைவர் கேட்டுக்கொண்டிருக்கிறார்; அவர் இப்போது முதன்முறையாக கேட்டுக்கொண்டதால், 'அவர்கள் இனிமேல் இவ்வாறு போராட்டம் எதுவும் நடத்தமாட்டார்கள்' என்று கருதி—அவர்கள் மீதான வழக்குகள் திரும்பப் பெறப்படும் என்ற உறுதியை அளிக்கிறேன்.

இங்கே மதுவிலக்குக் கொள்கை பற்றி இவ்வளவு தீவிரமாகப் பேசும் காங்கிரசுக்காரர்கட்குக் கூறிக்கொள்வேன் — அண்மையில் நடைபெறவிருக்கும் பொள்ளாச்சி நாடாளுமன்ற இடைத் தேர்தலில் மதுவிலக்குக் கொள்கையை முன்வைத்து சிண்டிகேட் கட்சி தேர்தல் பிரச்சாரம் நடத்தும் என்றே நம்புகிறேன்.

'நாங்கள் வந்தால் மதுவிலக்கைக் கொண்டுவருவோம் --- கள்ளுக் கடைகளை மூடுவோம்' என்று சிண்டிகேட் கட்சி பிரச்சாரம் செய்யக்கூடும். பொள்ளாச்சி இடைத் தேர்தலில் நிச்சயம் அவர்கள் அப்படிப் பிரச்சாரம் செய்வார்கள் என்றே நம்புகிறேன்.

ஆனால் பொள்ளாச்சி இடைத் தேர்தலில் காங்கிரசுக் கட்சி அதிகாரபூர்வமாகப் போட்டியிடவில்லை; அவர்கள் எந்த வேட்பாளரை ஆதரிக்கப்போகிறார்கள் என்பதும் நமக்குப் புரிந்ததே!

அந்த வேட்பாளர் சட்டமன்றத்தில் உறுப்பினராக இருந்தவர்; சட்டமன்றத்தில் அவர் பேசும் போது, 'மதுவிலக்குக் கொள்கைக் கூடாது; கள்ளுக்கடைகளைத் திறக்கவேண்டும்' என்று பேசியவராவார்!

அப்படிப்பட்ட வேட்பாளரைத்தான் சிண்டிகேட் கட்சி, பொள்ளாச்சியில் நடைபெறும் நாடாளுமன்ற இடைத் தேர்தலில் ஆதரிக்கப் போகிறது.

அதுமாத்திரமல்ல; சிண்டிகேட் கட்சி ஆதரிக்கப் போகும் அந்த வேட்பாளர் -- அவர் பெயரால் கள்ளுக்கடை எடுக்கவில்லை என்றாலும் -- அவரது சொந்தக்காரர் பெயரால் கள்ளுக்கடை எடுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லுகிறார்கள்.

அது உண்மையாக இருந்தால் பொள்ளாச்சி இடைத் தேர்தலில் சிண்டிகேட் காங்கிரசுக் கட்சி அவரை ஆதரிக்குமா ?"

ஐந்து பெரிய பஸ் நிறுவனங்கள் அரசுடைமையாகின்றன

554 தனியார் வழித் தடங்களை மேற்கொள்ளச் சட்டம்

சட்டமன்றத்தில் நிறைவேற்றம் — அமைச்சர் விளக்கவுரை

சென்னை, அக். 25—

ஐம்பதுக்கும் அதற்கு மேற்பட்டும் பஸ் பெர்மிட் வைத்திருப்பவர்களிடமிருந்து அந்தப் பஸ்களை ஏற்று அரசே நடத்துவதற்கு அதிகாரம் அளிக்கும் மசோதா, சட்டப் பேரவையில் — விவாதத்திற்குப்பின் நிறைவேறியது.

மார்க்கெட் நிலவரப்படி அவைகளுக்குப் பணமாகவோ — கடன் பத்திரங்களாகவோ நட்ட ஈடு வழங்கவும் இந்த மசோதா வகை செய்கிறது.

"இந்த மசோதாவின் மூலம் 5 பெரிய பஸ் நிறுவனங்களின் நிர்வாகத்தில் உள்ள 554 பஸ் ரூட்டுகள் அரசுடைமையாக்கப்படும்; அவைகளுக்கு ஈட்டுத் தொகை வெளிச்சந்தை விலை அடிப்படையில் பணமாகவோ அல்லது அரசு கடன் பத்திரங்களாகவோ தரப்படும்.

"அரசுடைமையாக்கப்பட்ட கம்பெனிகளின் சொத்துக்களை தொழிலாளர்களின் நலனுக்கென ஒதுக்கவும் இந்த மசோதா வகை செய்கிறது"

என்று போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ். இராமச்சந்திரன் அவர்கள், சட்டப் பேரவையில் மசோதாவை முன்மொழிந்து பேசுகையில் தெரிவித்தார்.

விவாதங்களுக்குப் பதிலளித்துப் பேசுகையில் அமைச்சர், தனியார் துறையில் மொத்தம் 1,344 பஸ் சொந்தக்காரர்கள் இருப்பதாகவும், அதில் 1-முதல் 4 பஸ்களை வைத்திருப்பவர்கள் 1,109 பேர்கள் என்றும், 5-முதல் 10 வரை பஸ் வைத்திருப்பவர்கள் 18 பேர்கள் என்றும் கூறினார்.

தற்போது அரசாங்கப் பஸ் போக்குவரத்துத் துறையில் ஒன்றரைக் கோடி ரூபாய் நட்டம் ஏற்படும் என்று எதிர்பார்த்ததாகவும், அது தற்போது ரூ. 50 இலட்சத்தில்தான் இருக்கும் என்பதைத் தெரிவிப்பதாகவும் கூறினார்.

தமிழ்நாட்டில்தான் இந்தியாவிலேயே பஸ் கட்டணம் குறைவாக உள்ளது என்றும், தற்போது பஸ் கட்டணம் சீரமைக்கப்பட்டுள்ளதே தவிர உயர்த்தப்படவில்லை என்றும் கூறினார்.

புதிய சட்டத்தின்படி, கீழ்க்கண்ட 5 பஸ் நிறுவனங்கள் அரசுடைமையாக்கப்படுகின்றன.

டி. வி. எஸ். — மதுரை.

இராம விலாஸ் — கும்பகோணம்.

ஆனைமலை — பொள்ளாச்சி.

சக்தி விலாஸ் — பொறையாறு.

இராமன் அண்டு இராமன் — கும்பகோணம்.

இந்த நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டிருந்த வழித் தடங்கள் (பஸ் ரூட்கள்) எண்ணிக்கை 554 ஆகும்.

(ரூட்கள் என்பது, அன்றாடம் ஓடும் பஸ்களின் எண்ணிக்கையைக் குறிக்கும்.)

அமைச்சர் விளக்கம்

மசோதாவை சட்டப் பேரவையில் கொண்டுவந்து பேசுகையில் போக்குவரத்து அமைச்சர் எஸ். இராமசந்திரன் அவர்கள் பேசியதாவது :—

"பொதுமக்கள் பயன்பெற வேண்டுமானால், உடைமைகள் ஒரே இடத்தில் குவிந்து கிடக்கக்கூடாது — பரவலாக்கப்பட வேண்டும்.

"அதற்கேற்ப, '50 பஸ்களுக்கு மேல் உள்ள நிறுவனங்கள் அரசுடைமை ஆக்கப்படும்' என்று முதலமைச்சர் அறிவித்திருந்தார்; அதைச் செயல்படுத்தும் வகையில் இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது.

"இந்த மசோதா மூலம், 5 பஸ் நிறுவனங்கள் அரசுடைமையாகின்றன.

"டி. வி. எஸ். நிறுவனத்தின் 284 வழித் தடங்களும், இராம விலாஸ் நிறுவனத்தின் 92 வழித் தடங்களும், ஆனைமலை நிறுவனத்தின் 75 வழித் தடங்களும், சக்தி விலாஸ் நிறுவனத்தின் 52 வழித் தடங்களும், இராமன் அண்டு இராமன் நிறுவனத்தின் 51 வழித் தடங்களும் அரசுடைமை ஆக்கப்படுகின்றன.

"தொழிலாளர்கள் நலம் பாதுகாக்கப்படவும் இந்த மசோதா வகை செய்கிறது."

விவாதத்துக்குப்பின் மசோதா, சட்டமாக நிறைவேறியது.

பிறகு, மேலவையிலும் நிறைவேறியது.

தமிழகச் சட்டமன்றம்—மீண்டும் நவ. 15-ல் தொடங்கும்

சென்னை, அக். 26—

தமிழ்நாடு சட்டப்பேரவைக் கூட்டம் நேற்றுடன் முடிவடைந்தது.

"மீண்டும் நவம்பர் 15-ம் நாள் காலை 10-மணிக்குக் கூடும்" என்று பேரவைத் தலைவர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் அறிவித்தார்.

பேச்சாளர் முகவரி

எம். எம். முத்தரசு,
13, கிருஷ்ணபுரம்,
குறுக்கு 4-வது தெரு,
மதுரை-9.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு [illegible] அச்சகத்தில் (24, [illegible] செட்டித் தெரு, சென்னை-1) அச்சிட்டு; வெளியிடப்பட்டது.

முரசொலி மாறன் தொடர்ந்த இந்தித் திணிப்பு எதிர்ப்பு வழக்கு

உயர் நீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்து டில்லி அரசு அப்பீல்

புதுடில்லி, அக். 25—

"மத்திய அரசு ஊழியர்கள் கட்டாயமாக இந்தி வகுப்புகளுக்குச் செல்ல வேண்டும் — என்ற மத்திய அரசின் உத்தரவு செல்லாது" என்று சென்னை உயர் நீதிமன்றம் — சில திங்களுக்கு முன் — தீர்ப்பு அளித்தது.

இத்தீர்ப்பை எதிர்த்து மத்திய அரசு, தலைமை நீதிமன்றத்தில் அப்பீல் செய்தது; இதனைத் தலைமை நீதிமன்றம் ஏற்றுக்கொண்டிருக்கிறது.

"அப்பீல் விசாரணை முடியும்வரையில், இந்தி வகுப்புகளுக்கு ஊழியர்கள் கட்டாயம் வரவேண்டும் என்ற உத்தரவை செயல்படுத்தலாம்" என்று நீதிமன்றம் அனுமதி வழங்கியது.

மத்திய அரசு ஊழியர்கள் இந்தி வகுப்புக்குக் கட்டாயம் செல்ல வேண்டும் என்ற உத்தரவை, சில மாதங்களுக்குமுன் மத்திய அரசு பிறப்பித்தது; இதை எதிர்த்து, முரசொலி மாறன் எம்.பி. அவர்களும் — அஞ்சல் துறை ஊழியர் ஜி. இலட்சுமணனும் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தனர்.

"ஒரு மொழியைப் படித்துத்தான் தீரவேண்டும் என்று கட்டாயப்படுத்துவதும், பரீட்சைக்குச் செல்லாதவர்களை தண்டிப்பதும் அரசியல் சட்டத்திற்கு எதிரானது" என்று அவர்கள் வாதம் செய்தனர்.

அவர்கள், வாதத்தை ஏற்றுக்கொண்டு, 'இந்தித் திணிப்பு உத்தரவு செல்லாது' என்று சென்னை உயர் நீதிமன்றம் தீர்ப்புக் கூறியது.

இந்தத் தீர்ப்பை எதிர்த்து, மத்திய அரசு அப்பீல் செய்தது.

'கட்டண உயர்வு என்பது சரியல்ல'

'புதிய சீரமைப்பின் காரணமாகச் சிலரே பாதிக்கப்படுவர்

சட்டப் பேரவையில் அமைச்சர் எஸ். இராமச்சந்திரன் விளக்கம்

சென்னை, அக். 25—

"'அரசுப் போக்குவரத்து பஸ்களில் கட்டண உயர்வு' என்பது சரியல்ல; கட்டண விகிதங்கள் ஒரு சீராக மாற்றியமைக்கப்பட்டிருக்கிறது; இதனால் ஏற்படும் உயர்வு, மொத்தத்தில் இரண்டு சதவிகிதத்தினரையே பாதிக்கும்"

என்று சட்டப் பேரவையில் போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ். இராமச்சந்திரன் அவர்கள் தெளிவுற விளக்கிக் கூறினார்.

இதன் தொடர்பாகக் கொண்டுவரப்பட்ட கவன ஈர்ப்புத் தீர்மானங்களுக்குப் பதிலளிக்கையில், அமைச்சர், அறிக்கை ஒன்றைப் படித்தார்; அதில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது :—

"சென்னை நகரில் நாள்தோறும் 10 இலட்சம் பேர் பஸ்களில் பயணம் செய்கின்றனர்; இதில் 6 இலட்சத்து 80 ஆயிரம் பயணிகள் 20 காசு கட்டணம் செலுத்திக் குறிப்பிட்ட தொலைவு வரை பயணம் செய்பவர்கள் ஆவார்கள்; மொத்தப் பயணிகள் எண்ணிக்கையில் இது 68 சதவிகிதம் ஆகும்; இவர்களைப் புதிய கட்டண விகிதம் எந்த அளவுக்கும் பாதிக்கவில்லை.

மீதமுள்ள 32 சதவிகிதப் பயணிகளில் முப்பது சதவிகிதத்தினர் 6 முதல் 14 கிலோ மீட்டர் வரை பயணம் செய்யும் பஸ் பயணிகள் ஆவார்கள்; இவர்களுடைய எண்ணிக்கை சுமார் 3 இலட்சம் ஆகும்; அவர்களைப் பொறுத்த வரையில் இந்தக் கட்டண மாறுதல் காரணமாக அவர்கள் 5 காசு வரை கட்டண உயர்வு கொடுக்க வேண்டியிருக்கும்.

மீதமுள்ள 2 சதவிகித பஸ் பயணிகளின் எண்ணிக்கை 20,000 ஆகும்; அவர்கள் இந்தக் கட்டண விகித மாறுதல் காரணமாக 15 காசு கூடுதலாகத் தர வேண்டிவரும்.

மேற்சொன்ன புள்ளிவிவரங்களைப் பார்த்தால், மாற்றியமைக்கப்பட்ட பஸ் கட்டண விகிதம் பெரும்பாலான பஸ்பயணிகளைப் பாதிக்கவில்லை.

வெளியூர் பஸ் கட்டணங்களைப் பொறுத்தவரையில், சில தனியார் நிறுவனங்கள் — போட்டியின் காரணமாக — வெவ்வேறு வகையான பஸ் கட்டணங்களை வசூலித்து வந்தன; இதனால் பல விரும்பத்தகாத போட்டிகள் இருந்தன; இதன் காரணமாக, கிலோ மீட்டருக்கு 3 காசு வசூலிக்க வேண்டும் என்று அரசு முடிவு செய்து மாநிலம் முழுவதிலும் நடைமுறைக்கு வரும் என்று அறிவித்தது.

அரசாங்கப் போக்குவரத்துத் தொடர்ந்து நட்டத்தில் செயல்பட வேண்டும் என்று எதிர்க்கட்சியினர் விரும்பமாட்டார்கள்; அந்த நிலையில், கட்டண விகிதத்தை மாற்றியமைப்பதைத் தவிர வேறு வழியில்லை."

காவிரி நீர்த் தகராறு வழக்கு

தலைமை நீதிமன்றம் விசாரணைக்கு ஏற்றது

ஐந்து நீதிபதிகள் முன்னிலையில் விசாரணை

புதுடில்லி, அக். 26—

காவிரி நீர்த் தகராறு பற்றித் தமிழக அரசு தொடர்ந்த வழக்கை தலைமை நீதிமன்றம் விசாரணைக்கு ஏற்றுக் கொண்டது; ஆயினும், காவிரியில் மைசூர் அரசு அணை கட்டுவதைத் தடுப்பதற்கு இடைக்காலத் தடை பிறப்பிக்க மறுத்துவிட்டது.

தமிழக அரசு தாக்கல் செய்த மனுவின்மீது நேற்று தலைமை நீதிமன்றத்தில் விசாரணை நடந்தது.

நீதிபதி ஷெலாத் தலைமையில் 5 நீதிபதிகள் மனுவை பரிசீலனை செய்தார்கள்.

தமிழக அரசின் சார்பில் வழக்கறிஞர் எஸ். வி. குப்தா வாதாடினார்; அவர் கூறியதாவது :—

"காவிரி நீர்த் தகராறை நடுவர் தீர்ப்புக்கு விடவேண்டியது மத்திய அரசின் கடமையாகும்; இந்தத் தகராறு நீண்ட நாட்களாக இருந்து வருகிறது.

நடுவர் தீர்ப்புக்கு விடாமல் தாமதம் செய்வதால் தமிழகத்தின் நலன் பாதிக்கப்படுகிறது.

தமிழக அரசின் வழக்கைத் தலைமை நீதிமன்ற — நீதிபதிகள் விசாரணைக்கு ஏற்றுக்கொண்டார்கள்.

மைசூர் அரசு தொடர்ந்து அணை கட்டுவதைத் தடுக்க அதற்கு இடைக்காலத் தடை விதிக்க வேண்டும் என்று தமிழக அரசு மற்றோர் மனு தாக்கல் செய்திருந்தது; அந்த மனுவின்மீது விசாரணை நடத்திய நீதிபதி ஷெலாத் கூறியதாவது :—

"தகராறுக்கு உள்ளான அணைக்கட்டு மைசூர் மாநிலத்தின் எல்லைக்குள்தான் கட்டப்படுகிறது; இப்போதைக்குக் காவிரி ஆற்றில் ஓடும் தண்ணீரின் அளவும் இந்த அணையினால் குறையவில்லை.

"இந்த வழக்கில் தமிழக அரசு வெற்றி பெற்றாலும், நீர்ப் பங்கீடு பற்றி நடுவர் குழு (டிரிபியூனல்)தான் முடிவு செய்ய வேண்டும்; ஆகவே இடைக்காலத் தடை தேவையில்லை."

முரசொலி மாறனும், தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகளும் சேர்ந்து மைசூர் அரசாங்கத்தின்மீது மற்றோர் வழக்குத் தொடர்ந்துள்ளார்கள்.

அந்த மனுவில் 'காவிரி ஆற்றின் குறுக்கே அணை கட்டி தண்ணீரைத் தடுப்பதால் எங்கள் அடிப்படை உரிமை பறிக்கப்படுகிறது; ஆகவே அணை கட்டுவதை தடுக்க வேண்டும்' என்று குறிப்பிட்டுள்ளனர்.

இந்த வழக்கும் விசாரணைக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பொள்ளாச்சி இடைத் தேர்தல்

கழக வேட்பாளருக்கு வலது கம்யூனிஸ்டு ஆதரவு

சென்னை, அக். 25—

"வருகிற நவம்பர் 13-ஆம் நாள் பொள்ளாச்சி நாடாளுமன்றத் தொகுதியில் நடைபெறவிருக்கும் இடைத்தேர்தலில் தி. மு. கழக வேட்பாளர் திரு. ஏ. ஆர். மோகன்ராஜ் அவர்களை ஆதரிப்பது என, இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் தமிழ் மாநில நிர்வாகக் குழு முடிவு செய்துள்ளது"

என்று, துணைச் செயலாளர் தோழர் கே. டி. இராசு ஓர் அறிக்கையில் கூறியுள்ளார்.

தரைக்கு அடியிலுள்ள தாமிரப் படிவங்கள்

அணு வெடி மூலம் எடுக்க முடியுமாம்

புதுடில்லி, அக். 26—

தரைக்கடியில் கட்டுப்படுத்தப்பட்ட அணு வெடிகள் மூலம் நாட்டில் உள்ள தாமிரப் படிவத்தை இலாபகரமாகப் பயன்படுத்த முடியும் என்பதை அணுசக்தித் துறையின் முதற்கட்ட ஆய்வு காட்டுகிறது.

சுமார் ஒரு சதவிகிதம் தாமிரம் உள்ள மட்டரகத் தாமிரப் படிவம் இந்தியாவில் ஏராளமாக உள்ளது; வழக்கமான முறைகள் மூலம் இலாபகரமாக அதைப் பயன்படுத்த முடியாது.

உலகத் தாமிர உற்பத்தியில் ஒரு சதவிகிதத்தை இந்தியா பயன்படுத்துகிறது; ஆனால் 0.2 சதவிகிதமே அது உற்பத்தி செய்கிறது.

இலாபகரமாக நிக்கல் படிவத்திலிருந்து எடுக்கவும் தரைக்கடியில் அணுவெடியைப் பயன்படுத்தலாம் எனவும் கருதப்படுகிறது.